Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No:173 of 2024

DATE : 13.05.2025

Depositions of witness for Prosecution

PW: 5

| | | | |
|---|---|---|---|
| Name | ராமசாமி | Caste | |
| Father/Husband's Name | குமாரசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of May 2025

**(1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் வெள்ளபொட்டலில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். 07.11.2022ம் தேதி மதியம் 2மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து போலீசார் பார்வை மகஜர் மற்றும் வரைப்படம் வரைந்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து உடைந்த கண்ணாடிகள் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நானும் கருப்பையாவும் கையெழுத்து செய்தோம். அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜர் அ.சா.ஆ. 2ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ.3ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எனது ஊர் வெள்ளப்பொட்டலா அல்லது அயன்கரிசல்குளமா என்றால் சொந்த ஊர் வெள்ளப்பொட்டல் அயன்கரசல் குளத்தில் குடியிருந்து வருகிறேன். சம்பவம் எங்கே நடந்தது என்றால் அழகாபுரியில் நடந்தது. எனது ஊருக்கும் அழகாபுரிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் இரண்டு மைல். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 07.11.2022 அன்று 2மணிக்கு விசாரித்தார்கள். எதற்காக கையெழுத்து செய்தேன் என்றால்போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைப்படம் தயார் செய்து கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று சொன்னால் சரியல்ல. வெள்ளை பேப்பரில் கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை.

வரைப்படம் வரைந்திருந்தார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு